## வெட்கம் இல்லையா?

ஈழத்திலிருந்து புலம் பெயர்ந்து பத்து லட்சத்திற்கும் மேல் உலகமெல்லாம் பரவிக் கிடக்கிற தமிழினமே..

எங்கள் பணத்தில் நடிகர்கள் வாழ்கிறார்கள் எங்கள் பணத்தில் நடிகைகள் சாப்பிடுகிறார்கள் என ஓயாது புலம்புகிற புலம்பெயர் தமிழனே.. உன் பணத்தை நம்பி அங்கே இரண்டு லட்சம் மக்கள் இருக்கிறார்கள் என்பதை உணர மாட்டாயா..?

அஜித்தையும் அர்சுனையும் உண்ணாவிரதத்திற்கு வரவைப்பதுதான் உன் உயர்ந்த பட்ச சேவையா..? அவர்கள் வருவது தான் உயர்ந்த பட்ச தேவையா..?

புலமெல்லாம் பரவியிருக்கும் தமிழனின் ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் தினமும் ஒரு டொலர் கொடுத்தாலே 2 லட்சம் மக்களுக்கு ஒரு நாளுக்கு ஒரு நேர முழு உணவு கிடைக்குமே..

மாதம் முப்பது டொலர்கள் முடியாதா உன்னால்..?

இந்த வரலாற்றின் தேவையை மறந்து அஜித்தோடும் அர்ச்சுனோடும் ஏன் மல்லுக் கட்டுகிறாய்?

ஐநா வோடு மல்லுக் கட்டேன். முடியுமா உன்னால்?

அழிப்பதற்கு ஆயுதமும் கொடுத்து - சாப்பிடுவதற்கு பிச்சையும் போடுகிறான் அவன்.

அந்த 800 டன் உணவும் வேண்டாம். நாங்கள் தருகிறோம் பணம். நீங்கள் அவர்களுக்கு கொண்டு போய்ச் சேருங்கள் என ஐநாவிடம் பேச முடியுமா உன்னால் ?

அஜித் வரவில்லையென்ற அடுத்த நிமிடம் ஏதேதோ அமைப்புகளின் ஊடாக அறிக்கை விடுகிறாயே.. ஐநா நோக்கி ஒரு அறிக்கையை விடேன்..

அந்த 2 லட்சம் மக்களின் தின உணவுக்கு தேவைக்கு நாங்கள் பொறுப்பு - அதை கொண்டு போய் சேர்ப்பதை உங்கள் பொறுப்பாக்க முடியுமா என ஐநாவைக் கேளேன்.

அதை விடுத்து அஜித்தோடு மெனக்கெட வெட்கமா யில்லையா எனக்கு?

மானமிருந்தால் ஒன்று கூடி அறிவித்துவிடு - நமது மக்களுக்கு நாம் தருவோம் உணவு. அதை ஐநாவும் செஞ்சிலுவையும் அனுப்பட்டும்.

தினமும் ஒரு டொலர் - நீ விமானநிலையத்தில் - புகையிர நிலையத்தில் மூத்திரம் பெய்ய கொடுக்கும் காசு!

கொடுக்கமாட்டாயா?

ஐநாவோடு பேசு ! உன் என் மக்களுக்கு நீயும் நானும் உணவளிப்போம்.

அதை விடுத்து அஜித்தை வரச்செய்வது தான் உன் இலக்கு என்றால் அவர் வருவதாக அறிவித்து விட்டார்தானே உன்போராட்டம் வெற்றியடைந்தது உலகத் தமிழரின் எழுச்சிக்கு அடிபணிந்தார் என கோசம் போட்டுகொண்டு போய் அவரின் படத்தை பார்..

*- பிரம்ம புத்திரன்*

## தாத்தாவின் தீபாவளிப் பரிசு



எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.

எது நடக்கின்றதோ அது நன்றாகவே நடக்கிறது

எது நடக்க இருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும்

-- யாருக்கு என்பது தான் மில்லியன் டொலர் கேள்வி?

*- அனோனி*

யாருக்கு மொட்டையடிக்கப்பட்டதோ அது நன்றாகவே அடிக்கப்பட்டது

இனி யாருக்கு மொட்டையடிக்கப்பட போகிறதோ அதுவும் நன்றாகவே அடிக்கப்படும். இது கீதையில்லை பதவிப் போதை.

*- சாத்திரி*

வரப் போகின்ற நாடாளுமன்ற தேர்தலில் மக்கள் நாற்பது தொகுதிகளிலும் நல்ல மொட்டை அடிப்பார்கள்.

*- குப்பன் யாஹூ*

## எங்கள் குரல் கேட்கிறதா?

அன்பார்ந்த எமது உயிரினும் மேலான தமிழக உறவுகளே.

உங்கள் உணர்வுகளினாலும் செயல்களினாலும் எமது கண்கள் குளமாகின்றன. வார்த்தைகள் தோன்ற மறுக்கின்றன. ஆனாலும் எமது இதயம் பேசுகின்றது.

அது காலத்தின் கடமையும் தேவையும் கூட.

எங்கே நீங்கள் எங்களை மறந்து தூங்கி விட்டீர்களே? என்று ஏங்கித் தாங்க முடியாமல் தவித்த எங்களுக்கு உங்கள் கரங்களும் தோள்களும் ஆறுதலையும் மகிழ்ச்சியையும் அளிக்கின்றன.

ஈழத்தில் நாங்கள் பிணங்களின் மேல் தூங்கியும் நடந்தும் அலைகின்றோம்.. இரத்தமும் கண்ணீரும் கலந்த குளத்தில் மூழ்கி எழுகின்றோம்.

உறவே நாங்கள் வீட்டையும் இழந்து விட்டோம் உறவையும் இழந்து விட்டோம் ஊரையும் இழந்து விட்டோம். உயிரையும் உணர்வையும் தவிர எமக்கு இழப்பதற்கு எதுவுமே இல்லை. இழந்து விட்டோம் என்பதை விட சிங்கள இனம் பறித்து விட்டார்கள் என்பதே பொருந்தும்..

சிங்கள இனத்தவர் எண்ணற்ற எமது சகோதரிகளின் கற்புகளை பறித்து கொலை செய்கின்றார்கள். வயது வேறுபாடின்றிக் சித்திரவதை செய்து கொல்லப்பட்ட உடல்களை தெருவோரம் வீசி எறிகின்றார்கள். கத்தியால் குத்தியும் துவக்கால் சுட்டும் பாரிய குண்டுகளை வீசியும் உயிரோடு புதைத்தும் எமது உறவுகளை அழிக்கின்றார்கள்.

உணவையும் மருந்தையும் எமக்கு வர விடாமல் தடை செய்கின்றார்கள். பாரிய பொருளாதாரத் தடையை விதிக்கின்றார்கள். அடிக்கடி பாரிய குண்டுகளை வீசி எங்களை போகின்ற இடங்களில் இருந்து எல்லாம் கலைக்கின்றார்கள்.

பசியும் ஓட்டமும் நடையும் எங்கள் உற்ற நண்பர்களாகின்றார்கள்.

நாங்கள் படும் வேதனைகளும் கண்ணீரும் வெளியில் தெரியாமல் மறைக்கப்படுகின்றன. அவைகள் எங்களுக்குள்ளேயே ஒங்கி ஒலித்து மறைகின்றன.

எங்கள் நிலைமை இந்த உலகில் யாருக்கும் வரக் கூடாது. எமது எதிரிகுக் கூட வரக்கூடாது. அனுபவித்தவர்களுக்குத்தான் அந்த வலியும் வேதனையும் புரியும்.

ஆனாலும் நாங்கள் எழுந்து நிற்கின்றோம் நிமிர்ந்து நிற்கின்றோம். ஏனென்றால் என்றோ ஒரு நாள் எமக்கும் விடிவு வரும் என்ற நம்பிக்கையிலும் உலகத் தமிழ் இனம் எல்லோரும் ஒன்று சேருவார்கள் கை கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையிலும் தான் நாங்கள் விழ விழ எழுகின்றோம்.

இப்போது வானம் வெளிக்கின்றது விடிவெள்ளி தெரிகின்றது. இலட்சம் இலட்சம் தமிழ் உயிர்கள் விட்ட கண்ணீருக்கும் நீங்கள் கண் திறக்க மாட்டீர்களா என்று இருந்த எங்கள் தவத்திற்கும் பதில்கள் கிடைக்கின்றன.

இன்னுமே இதயத்தைத் திறக்காமல் இருக்கும் உறவுகளே சொல்லுங்கள் எங்களுக்கு யாருமே இந்த உலகில் இல்லையா?

எங்கள் அழுகுரல்கள் உங்கள் காதோரம் வந்து கேட்கவில்லையா? உங்களின் மனச்சாட்சியை எமது வேதனைகள் தொடவில்லையா?

கற்புகள் பறிக்கப்பட்ட போது அந்தச் சகோதரிகள் எழுப்பின ஓலங்கள் உங்கள் கண்ணைத் திறக்கவில்லையா?

திறவுங்கள் உறவுகளே திறவுங்கள்.

நாங்கள் அழிவின் விழிம்பில் இருந்து கதறுகின்றோம் இரக்கின்றோம்.. சாவு எமக்கு நன்றாகத் தெரிகின்றது அழைக்கின்றது.

உதவிக் கரங்கள் இன்றி நாம் சாவை நோக்கிச் செல்கின்றோம். உறவுகளே அதுதான் உங்களுக்கு ஆத்ம நிம்மதி தரும் என்றால் நீங்கள் வடிவாகத் தூங்குங்கள். உங்களுக்கு நல்ல தூக்கம் வர நாங்கள் இறைவனை வேண்டுகின்றோம்.

இப்படிக்கு

*ஈழத்து அகதி*

## கொடுமையடா சாமி!

கணவன்: ஆர்ப்பாட்டம் செய்ததுக்காகப் பொலிஸ் காறர் பிடிச்சுக் கொண்டு போட்டினமாம்

மனைவி: யாரையப்பா?

கணவன்: இந்தியாவிலை வைக்கோவைத் தான்

மனைவி : எட அவரையே ! நான் விஸ்வநாதனோடை சண்டை பிடிச்சதுக்காக ‘அரசியை’ ஆக்கும் எண்டு நினைச்சுப் பயந்து போனன்.


**Painfree Clinic**



- **NHS** அழைப்பிற்காக காத்திருந்து அலுத்து விட்டதா ?
- கை, கால், கழுத்து, முதுகு வலியுடன் நெடுநாள் அவஸ்த்தையா ?
- மொழி பிரச்சினையால் உங்கள் வலியை முழுமையாக உணர்த்த முடியவில்லையா ?
- நமக்காக ஒன்று அருகில் இருந்தால் நன்று என நீங்கள் நினைப்பது எங்களுக்கு கேட்டது, . . .

அதனால் Bromley இல் ஒரு புதிய Physiotherapy சிகிசை அறை (வீட்டுச் சூழலில்)

மருத்துவமனை செல்கிறோம் என்ற எண்ணம் தோன்றா வண்ணம் முழுவதும் வீட்டுச் சூழலிலே !

உடனே முன்பதிவு செய்யுங்கள் நலம் பெறுங்கள் தொடர்புகளுக்கு:
07903501336 07794424147



**WEBSITE DESIGN**

**தமிழில் இணையத்தளம் உருவாக்கும் பயிற்சி**

▶ நீங்கள் தமிழில் இணையத்தளம் உருவாக்கும் பயிற்சியைப் பெற வேண்டுமா?

கிழமை நாட்களில் மாலை நேரத்தில் 3 மணி நேர பயிற்சி வகுப்புகள் நடைபெற உள்ளன

5 வகுப்புகளில் பயிற்சி பெற்றபின் நீங்களாகவே ஒரு இணையத் தளத்தை உருவாக்கும் ஆற்றல் பெறுவீர்கள்.

**இடத்திற்கு முந்துங்கள்**

பதிவு செய்வதற்கு

தொலைபேசி: **020 7043 4316**

*45B, Crusoe Road, Mitcham, CR4 3LJ*



**A J ACCOUNTANCY**

Auditors & Accountants

Over 25 years in public practise



43 Anerley Road, London SE19 2AS

Accounts Preparation, Self Assessment, VAT & PAYE Returns

An Efficient, Practical Service for small to Medium Size Companies, Partnerships & Sole Traders

Tel: 020 8778 8666

Fax: 020 8778 8999

Email: info@ajaccountancy.co.uk

Web: www.ajaccountancy.co.uk



**ஒரு பேப்பர** ORU PAPER

உங்கள் வாசல் தேடி வர, ஒரு வருடத்திற்கு £25 மட்டுமே!

SUBSCRIPTION FORM

Name: ____________

Address : ____________

Postcode: ____________

Telephone: ____________

Email: ____________

மேலுள்ள விண்ணப்ப படிவத்துடன், £25 க்கு "Oru Paper Ltd."" ன் பெயரில் காசோலையினையும், Oru Paper, 45'B' Crusoe Road, Mitcham, Surrey CR4 3LJ, என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.